# உள்ளே, வெளியே

**ஆபிரகாம் வெண்ணெயையும் பாலையும் சமைப்பித்த கன்றையும் எடுத்து வந்து, அவர்கள் முன்பாக வைத்து, அவர்கள் அருகே மரத்தடியில் நின்றுகொண்டிருந்தான்; அவர்கள் புசித்தார்கள். (ஆதி 18:8)**

ஆண்டவரும், தேவதூதர்கள் இருவரும் ஆபிரகாமைச் சந்தித்தபோது, சந்தித்த இடத்திலிருந்த மரத்தினடியிலேயே சாப்பிடும்வரை அவர்கள் சாய்ந்துகொண்டிருந்தார்கள்; ஆபிரகாமின் கூடாரத்திற்குள் அவர்கள் பிரவேசிக்கவில்லை. ஆகாரம் கூடாரத்தில் ஆயத்தப்படுத்தபட்டபோதிலும், சமைத்தவைகளோ கூடாரத்துக்கு வெளியிலேதான் பரிமாறப்பட்டன. **அழைக்கப்பட்ட மனிதனுடைய உபசரிப்பை, எவ்விடத்திலும் ஆண்டவர் அங்கீகரித்துக்கொள்கிறார். ஆனால், தனக்கு தூரமாயிருப்பவர்களை நோக்கியோ, "முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து"** (மத் 5:24) **என்கிறார்.**

லாபான், அந்நிய தெய்வங்களை வணங்கிக்கொண்டிருந்தவன் (ஆதி. 31:30-32). லாபான் ஆபிரகாமின் வேலைக்காரனைச் சந்தித்தபோது, **"கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே, உள்ளே வாரும்;** நீர் வெளியே நிற்பானேன்? உமக்கு வீடும், ஒட்டகங்களுக்கு இடமும் ஆயத்தம்பண்ணியிருக்கிறேன்" என்று சொன்னான் (ஆதி. 24:31). உபசரிப்பினைத் தொடர்ந்து, கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரிடத்தில் மகளை மணவாட்டியாகக் கொடுத்து அனுப்பினான் லாபான். "கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்" நம்முடைய வீட்டிற்குள் பிரவேசிப்பது, நம்மை "இயேசு கிறிஸ்துவுக்கு மணவாட்டிகளாக மாற்றவே." அவர்கள் உபசரிக்கப்படவேண்டியவர்கள் மாத்திரமல்ல, உங்களை **மணவாட்டியாக இயேசுவினிடத்தில் அழைத்துச் செல்லும்படியாகவே அனுப்பப்பட்டவர்கள்.**

நூற்றுக்கு அதிபதியின் வீட்டிற்கு இயேசு வருகிறேன் என்று சொன்னபோது, அவன் ஆண்டவரை நோக்கி: ஆண்டவரே! **நீர் என்**

**வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல**; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான் என்றான் (மத் 8:5-8). நூற்றுக்கு அதிபதியின் விசுவாசத்தினால் வேலைக்காரனுக்கு சுகம் உண்டாகிவிட்டபோதிலும், அவனது **வீடு இயேசு பிரவேசிக்கும் அளவிற்கு சுத்தமாகவேண்டும்** என்ற செய்தி இந்நிகழ்வில் மறைமுகமாகச் சொல்லப்படுகின்றதே. கானானிய ஸ்திரீ இயேசுவை பின்தொடர்ந்து வந்து, **"ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்**, என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள்" என்று சொல்லிக் கூப்பிட்டபோது அவர் அவளை நோக்கி: பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து, நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்றார் (மத் 15:22,26). ஆனால், எரிகோவுக்குச் சமீபமாய் இயேசு வந்தபோது, வழியிலே பிச்சைகேட்டுக்கொண்டிருந்த குருடன் ஒருவன், "**இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்"** என்று கூப்பிட்டபோது (லூக் 18:37), உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றாரே; அது அவனது சரீர மற்றும் ஆத்தும சுகத்தையும் உள்ளடக்கியது.

அவ்வாறே, இயேசு சகேயுவை நோக்கி: சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கி வா, இன்றைக்கு நான் உன் **வீட்டிலே தங்கவேண்டும்** என்றார். இயேசு சகேயுவின் வீட்டிற்குச் சென்றபோது, "அதைக் கண்ட யாவரும்: இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார் என்று முறுமுறுத்தார்கள்." சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு **இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது**; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே (லூக் 19:5-9) என்றார். **நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன்** என்பதுதானே தன்னைக் குறித்த இயேசுவின் அறிமுகமாயிருந்தது. (லூக் 5:32).

பாவிகளின் உபசரிப்பை ஏற்கும் முன், அவர்களது வீட்டில் அவர் பிரவேசிக்க விரும்புகிறார். இதனை அறியாத அநேகர் இன்னும் பாவமான வாழ்க்கை வாழ்ந்துகொண்டு வெளியிலேயே அவரை உபசரித்துக்கொண்டிருக்கிறார்கள்; தங்களுடைய **இருதயத்தை ஆண்டவருக்குக் கொடுக்காமல், தங்களிடம் இருப்பதை ஆண்டவருக்குக் கொடுத்துக்கொண்டிருப்பது அவரை ஒருபோதும் திருப்திப்படுத்தாது**.